# Ramana Kavacham

## Prayer for Protection

காப்பு

உமைவணங்கு முத்தமர் தம்மக கண்காண்
தமைநிறுத்து ஆத்மவழி காப்பு

அருணை மாமுனி ரமணர் வாழ்க
கருணை காட்டும் கந்தா வாழ்க
திருமுக அககுகைத் திருவே வாழ்க
உருஅறு வருஇரு சிவமே வாழ்க

ஒருமலர் அதனை ஒன்றாய் ஆங்கே
இருமுலை நடுவன இருவிரல் வலத்தே
இருப்பாய் புரித்து இதய மென்றே
பொருளது தவம்தினம் உளதாய் வாழ்க

ஒன்றிலே அனைத்தும் ஒன்றி இன்றி
பன்முக வடிவம் பற்றிக் கொண்டு
ஓடும் எண்ணம் ஓடி ஆட
காடும் ஆறும் காவி அணிந்து
போன இடத்தில் புண்ணிய மிலையே
மோன உளத்தில் மோகம் அறுத்து
தானே தானே தத்துவ மெனவே
தானே காட்டித் தந்தாய் வாழ்க

மூச்சினில் கவனம் முற்றும் வைத்து
பேச்சில் ஆசை பற்றா திருந்து
புத்தர் கூறிய புதுவழி அதனைப்
பத்தர் யாவரும் பயில எளிதில்
நானார் என்றே நல்கி இங்கே
தானாம் தன்னைத் தன்னில் காட்டி
எந்தை ரமண ரெனுமொளி வடிவில்
தந்தாய் அவ்வழி தகமை வாழ்க

வந்த வினையும் வந்து போக
தந்த கன்மம் தாமே போகும்
சிந்தை தன்னை சீவன் தன்னில்
எந்த நேரமும் எளிதாய் இருப்பில்
தந்த மோன தத்துவன் வாழ்க

தாயை உய்க்கத் தன்கை கொண்டு
மாயை நீத்து மௌனம் தந்து
முன்வினை அனைத்தும் முற்றிலும் அகற்றி
பின்வினை எவையும் பற்றா வண்ணம்
முத்தி அளித்து ஒன்றாய் கூட்டி
சித்தி அருளிய குகனே வாழ்க

முன்னாள் தந்தைக்கு முத்தியின் வடிவம்
ஒன்றாம் அந்த ஓமென பொருளும்
பின்னாள் அன்னை பத்தி பண்ண
அன்பின் வடிவில் அண்டம் வந்து
துன்பம் துடைத்த தூயவன் வாழ்க
அன்பே ஒத்த அழகே வாழ்க

கடலில் தேங்கும் ஓடம் போல
உடலில் பொங்கும் உணர்ச்சி யாவும்
வந்து போகும்! வந்தால் போனால்
சிந்தை யற்று சீற்ற மற்று
பந்தப் புத்தியும் மனமும் அடங்கி
எந்தப் பற்றும் எய்தாப் பாங்கு
துறவு என்றே துய்த்தோய் வாழ்க
அறநெறி நிறைமன அமுதம் வாழ்க

வாய்மொழி மொழிந்து வாசகம் ஓதி
ஓய்ந்த மனத்தை ஒன்றாய்ப் பார்க்க
மந்திர செபமும் உள்ளே செய்து
மந்த புத்தி மலர்ந்த பின்னே
மனதைத் தோற்றும் மூலம் தன்னை
முனைப்பாய் பார்த்தால் முன்னே தோன்றும்
ஒரிடம் உள்ளம் ஒன்றாய் ஒடுங்கி
பேரில்லா ஓரொளி பெருமான் வாழ்க

ஆன்ம கேள்வி அஃதே உண்மை
தான்தான் என்ற தன்மை வாழ்க

துக்கம் சோகம் துவ்வும் ஆசை
சிக்கி உள்வரும் சிறுமை தள்ளி
மனத்தில் கூர்ந்து ஆன்ம விசாரம்
தினமே போதும் தொல்லை எல்லாம்
தாமே செல்லும் தந்தாய் வாழ்க
நாமே நம்மில் நாமாய் வாழ்க

'நானே செய்வேன்' நச்சிய அகந்தை
தானே விட்டு தானா யங்கே
'சும்மா இருவென' உமது போதம்
அம்மா அதுவே ஆழம் வாழ்க
அத்துவி தசெயல் அதுவே உத்தமம்
முத்தி நித்தம் சத்தியன் வாழ்க

கேட்டு பாடிக் கண்ணாய் நினைத்து
தொட்டு திருவடி துதித்து தொழுது
நட்புர நடந்து நன்றே செய்து
எட்டு பத்தி என்கிற வழியில்
உன்னில் உள்ள உண்மை உணர
'ஆன்ம பத்தி அகத்தில் தேடு'
நவமே பத்தி கன்மம் ஞானம்
தவமே தன்னில் தினமும் வாழ்க

வருவது அதுவே வரட்டும் போவது
சருகாய் போகும் அதுவே சரணம்
கருமம் தானாய் அருளால் நடக்கும்
பொருமை என்றாய் குருவே வாழ்க

பக்தரின் பக்தராய் உனது பக்தரின்
பக்கமே பணிவிடை பத்தி பாங்கில்
சுத்த  சேவை செய்யும் உறுதி
நித்தம் எமக்கு நன்கு செல்லப்
பித்தம் தவிர்க்கும் முத்தனே வாழ்க
அத்தம் பத்தர் அனைவரும் வாழ்க

பேய கந்தை பெரிதாய் நின்றால்
மாய மனது மறைத்து நிற்கும்
காயம் வளரும் காமம் கூடும்
நாயாய் செல்லும் நயந்த மனத்தை
சேயாய் எம்மை சேவித் தருளி

தாயாய் வந்த தலைவா வாழ்க

சுற்றம் யாவும் சுற்றி இருப்பின்
குற்றம் காணாக் காரியம் பணித்தாய்
மாற்ற மற்று மறவா கவனம்
போற்றி புரித்தால் புகலே வாழ்க

பத்தர் துன்பம் பார்த்து அறுப்பாய்
முத்தி தருபெரு சத்தி வாழ்க
பத்தி ஓதிய பாங்கும் வாழ்க
நித்தம் காக்கும் நின்னருள் வாழ்க
வாழ்க கந்த சத்தி வாழ்க
வாழ்க ரமண பகவான் வாழ்க
வாழ்க வாழ்க ரமண பகவான்

சூரிய ஒளியாய் சுத்த ஆத்மா
பாரில் வாழும் பரமே வாழ்க
வாழ்க வாழ்க அன்பே வாழ்க
வாழ்க வாழ்க மௌனம் வாழ்க

சரணம் சரணம் ரமணா சரணம்
சரணம் சரணம் ரமணா சரணம்
சரணம் சரணம் ரமணா சரணம்
சரணம் சரணம் ரமணா சரணம்!

## Kāppu

Umaivaṇaṅgu muttamar tammaga kaṇgāṇ
Tamainiṟuttu ātmavazhi kāppu

Enable inner sight and wisdom for those who worship you.
Protect such devotees by establishing them in the path of Self.

Aruṇai māmuni ramaṇar vāzhga
Karuṇai kāṭṭum kandā vāzhga
Tirumuga agakugait tiruvē vāzhga

Uruaṟu varuiru sivamē vāzhga

Great sage of Aruna Ramana, be blessed
Showering your Compassion as Skanda, be blessed
Shining pure in beauty inner cave, be blessed
Come to remove the form, O’ Siva, be blessed

Orumalar adanai oṇḍrāy āṅgē
Irumulai naḍuvana iruviral valattē
Iruppāy purittu idaya meṇḍrē
Poruḷadu tavamdinam uḷadāy vāzhga

Bloomed in oneness, a flower enter
Two digits to the right of the center
Exists as I-I, Heart, it is called, Sense!
Holding that day after day is penance

Oṇḍrilē anaittum oṇḍri iṇḍri
Panmuga vaḍivam paṭrik koṇḍu
Ōḍum eṇṇam ōḍi āḍa
Kāḍum āṟum  kāvi aṇindu
Pōna iḍattil puṇṇiya milaiyē
Mōna uḷattil mōgam aṟuttu
Tānē tānē tattuva menavē
Tānē kāṭṭit tandāy vāzhga

Not abiding in one’s peace always
Pursuing forms in many different ways
Dance and run fast with fleeting thoughts
Wearing robes, visiting rivers or forests -
Peace and calm never come from outside
Dropping desires, one needs a quiet inside

Mūccinil kavanam muṭrum vaittu
Pēccil āsai paṭrā tirundu
Puttar kūṟiya puduvaḻi adanaip
Pattar yāvarum payila eḷidil

Nānār eṇḍrē nalgi iṅgē
Tānām tannait tannil kāṭṭi
Endai ramaṇa renumoḷi vaḍivil
Tandāy avvaḻi tagamai vāzhga

Keeping full attention on one’s breathing,
Desiring in neither mind nor talking,
Buddha showed us a great new path.
To make it easy for devotees on earth,
You taught a new way as “Who am I”
Revealing One in One’s Self and aye
My father, Lord Ramana the beauty light,
Blessed us with our easier path in sight

Vanda vinaiyum vandu pōga
Tanda kanmam tāmē pōgum
Sindai tannai jīvan tannil
Enda nēramum eḷidāy iruppil
Tanda mōna tattuvan vāḻga

My work and burden come, let’em come
And go on their own, never hold some!
Mind always soley fixed in one’s soul,
It becomes easier to be one’s whole!

Tāyai uykkat tangai koṇḍu
Māyai nīttu maunam tandu
Munvinai anaittum muṭrilum agaṭri
Pinvinai evaiyum paṭrā vaṇṇam
Mutti aḷittu oṇḍrāy kūṭṭi
Sitti aruḷiya kuganē vāzhga

With Thy Hands, Blessed Thy Mother
Removing her ignorance of the other
Completely released from the past deeds
No other future residual work, indeed
Unconditional release to merge in One
O’Guha, what a blessing, a great son!

Munnāḻ tandaikku muttiyin vaḍivam
Oṇḍrām anda ōmena poruḷum
Pinnāḻ annai bhatti paṇṇa
Anbin vaḍivil aṇḍam vandu
Tunbam tuḍaitta tūyavan vāzhga
Anbē otta aḻagē vāzhga

Earlier Thou explained the meaning of OM
To your father, as being as One, all its sum!
Later, For your mother to pray, You
Came to this world for her due!
In time, removed all of her pain
Adoring beauty as love, you reign!

Vāymozhi mozhindu vāsagam ōdi
Ōynda manattai ōṇḍrāyp pārkka
Mandira sebamum uḻḻē seydu
Manda putti malarnda pinnē
Manadait tōṭrum mūlam tannai
Munaippāy pārttāl munnē tōṇḍrum
Oriḍam uḷḷam oṇḍrāy oḍuṅgi
Pērillā ōrozhi perumān vāzhga

With many thoughts coming out as speech
Revive the tiring mind, as You teach
Repeat mantras continuously inside
Flower the mind, lowering the tide
‘Whence the mind comes from its source’,
Carefully watching will guide one, a force!
There is only One, all go to the same
That big Light shines, with no name!

Ānma kēḻvi ahdē uṇmai
Tāndān eṇḍra tanmai vāzhga
Tukkam sōgam tuvvum āsai
Sikki uḷvarum siṟumai taḻḻi

Manattil kūrndu ānma visāram
Tinamē pōdum tollai ellām
Tāmē sellum tandāy vāzhga
Nāmē nammil nāmāy vāzhga

Self enquiry, that is the only truth
I-I is its nature, all else is untruth
Miseries, never quenching desires and woes
Smallness bubbling inside, ignoring all those
Focusing the mind only in Self enquiry
Day after day, all those bothers just flea
After these distractions completely gone
What remains is only real, just hold on!

‘nānē seyvēn’ nacciya agandai
Tānē viṭṭu tānā yaṅgē
‘Summā iruvena’ umadu pōdam
Ammā aduvē āḻam vāzhga
Attuvi taseyal aduvē uttamam
Mutti nittam sattiyan vāzhga

“I will do this”, speaks thus the ego
See, and learn to free and let go
“Just be quiet”, Thy words are like nectar
O’Lord, that is deep with a different vector!
Non dual action is the best of actions!
Please grant the liberation, no factions

Kēṭṭu pāḍik kaṇṇāy ninaittu
Toṭṭu tiruvaḍi tudittu toḻudu
Naṭpura naḍandu naṇḍrē seydu
Eṭṭu patti engiṟa vaḻiyil
Unnil uḷḷa uṇmai uṇara
‘Ānma patti agattil tēḍu’
Navamē patti kanmam ñānam
Tavamē tannil tinamum vāzhga

Hearing, chanting, constantly pondering,

Serving His lotus feet, worship offering,
Prayer, Being a Servant, and as a friend
Eight paths of devotion for one’s end
Know the ultimate truth step by step!
Ninth form of devotion in all its glory pep
Is searching inside one’s Self, finding
And realizing is staying as one binding!
That is work, and non-work, that is devotion
That is knowledge, so stay with no notion!

Varuvadu aduvē varaṭṭum pōvadu
Sarugāy pōgum aduvē saraṇam
Karumam tānāy aruḷāl naḍakkum
Porumai eṇḍrāy guruvē vāzhga

Whatever happens will happen, whatever
Goes, will go like dried leaves, forever!
Everything happens of its own accord
Patience is the only answer you can afford!
Thy words resonate everyday in our lives
What an armor! Be guided, one arrives!

Paktarin paktarāy unadu paktarin
Pakkamē paṇiviḍai patti pāṅgil
Sutta  sēvai seyyum uṟudi
Nittam emakku nangu sellap
Pittam tavirkkum muttanē vāzhga
Attam pattar anaivarum vāzhga

As a devotee of your devotees’ devotion
Can’t wait to swim in your Grace ocean!
To serve those devotees in all their needs
Please give me the strength in those deeds!
Day after day to keep the focus in that pursuit
Remove the madness; Mind with no dispute
Comes only through Your Presence direct!
Bless all those devotees to become perfect!

Pēya kandai peridāy niṇḍrāl
Māya manadu maṟaittu niṟkum
Kāyam vaḷarum kāmam kūḍum
Nāyāy sellum nayanda manattai
Sēyāy emmai sēvit taruḷi
Tāyāy vanda talaivā vāzhga

Ghost like wandering ego standing tall
The reality will remain hidden, it’s a brawl!
Body grows big, desires keep adding
Mind wanders like a dog, slowly fading!
Like a mother protecting her child to bliss
Please save us falling in that deep abyss

Suṭram yāvum suṭri iruppin
Kuṭram kāṇāk kāriyam paṇittāy
Māṭra maṭru maṟavā kavanam
Pōṭri purittāl pugalē vāzhga

Those friends and families surrounding
No need to find faults in their sounding!
Focus on our duty which is Self enquiry
What a clear path, keep us from misery!

Bhattar tunbam pārttu aṟuppāy
Mutti taruperu satti vāzhga
Patti ōdiya pāṅgum vāzhga
Nittam kākkum  ninnaruḷ vāzhga
Vāzhga kanda satti vāzhga
Vāzhga Ramaṇa Bhagavān vāzhga
Vāzhga vāzhga Ramaṇa Bhagavān

When in pain and suffering, no need to shout
For you look after us, there isn’t a doubt
You will liberate us from all these pains
As long as we are devoted with no stains!
That devotion is only discovering the truth

Shining inside, bright and great in sooth!
Be blessed for you are the force of real
Bhagavan Ramana gives our soul meal!

Sūriya oḷiyāy sutta ātmā
Pāril vāzhum paramē vāzhga
Vāzhga vāzhga anbē vāzhga
Vāzhga vāzhga maunam vāzhga (110)

Like a shining Sun, a great effulgence Light
Has come to the earth to remove our plight!
Your wisdom perfect spreads its rays!
Your glance of silence sets us ablaze!

Anbar vāzha Ramaṇar kavacham
Inbam uykka iyaṭrum vaḍivu
Ramaṇa dāsan ramittu
Kamazhum mutti sīkkiram taravē. (114)

Through your Grace, for devotees armor
Ramana dasa to write this poetic armor,
For your Grace is infinite, it’s present always
Grant us your feet, and give your embrace!

Saraṇam saraṇam ramaṇā saraṇam
Saraṇam saraṇam ramaṇā saraṇam
Saraṇam saraṇam ramaṇā saraṇam
Saraṇam saraṇam ramaṇā saraṇam!